# வல்வெட்டித்துறை நகரசபை

## அறுபத்திரண்டாவது சபை அமர்வு – 18.01.2023

நகர சபையின் அறுபத்திரண்டாவது அமர்வு சபை மண்டபத்தில் **18.01.2023 புதன்கிழமை மு.ப 9.30** மணியளவில் தவிசாளர் திரு.இ.சுரேன் அவர்களின் தலைமையில் ஆரம்பமாகியது.

கூட்டத்திற்கு சமூகமளித்தோர்.

1. திரு.தங்கவேலாயுதம் சுந்தரலிங்கம் - கௌரவ உபதவிசாளர்.
2. திரு.சபாரத்தினம் செல்வேந்திரா - கௌரவ உறுப்பினர்.
3. திரு.இராமச்சந்திரன் சுரேன் - கௌரவ தவிசாளர்.
4. திரு.முருகுப்பிள்ளை ஆனந்தராசா - கௌரவ உறுப்பினர்.
5. திரு.ஆறுமுகம் ஞானேந்திரன் - கௌரவ உறுப்பினர்.
6. திரு.சண்முகம்பிள்ளை சண்முகதாஸ் - கௌரவ உறுப்பினா்.
7. திரு.பாலச்சந்திரன் ஜெகன் - கௌரவ உறுப்பினர்.
8. திரு.செந்திவேல் தமிழினியன் - கௌரவ உறுப்பினர்.
9. திருமதி.இந்திரன் கைலாஜினி - கௌரவ உறுப்பினா்.
10. திரு.மகாலிங்கம் மயூரன் கௌரவ உறுப்பினர்.
11. திருமதி சுந்தரேஸ்வரி கவிஞன் - கௌரவ உறுப்பினர்.
12. திரு.அருமைரத்தினம் சதீஸ்வரன் - கௌரவ உறுப்பினர்
13. திரு.கந்தசாமி சதீஸ் - கௌரவ உறுப்பினர்.
14. திருமதி.இராஜேஸ்வரி குணரத்தினம் - கௌரவ உறுப்பினர்.
15. திரு.குகதாஸ் கமலதாஸ் - கௌரவ உறுப்பினா்.
16. திரு.துரைராசா ஸ்ரீதரன் - கௌரவ உறுப்பினா்.
17. திருமதி.அன்ரநற் சுபாசினி இமானுவல் சிறில் ஜெயராசா - கௌரவ உறுப்பினர்.

மௌன வணக்கத்துடன் சபை அமர்வை ஆரம்பித்த தவிசாளர், முதலில் சென்ற கூட்ட அறிக்கைகளை அங்கீகரிப்பதில், 20.12.2022 ஆந் திகதி நடைபெற்ற 61 ஆவது சபை அமர்விற்கான குறிப்பில் திருத்தங்கள் ஏதுமிருப்பின் குறிப்பிடுமாறும் அல்லது கூட்ட குறிப்பை அங்கீகரிக்குமாறும் சபையை கேட்டுக்கொண்டார். திருத்தங்கள் ஏதுமற்ற நிலையில் கூட்டக்குறிப்பானது உறுப்பினர் திரு.ஆ.ஞானேந்திரன் முன்மொழிய உபதவிசாளர் திரு.த.சுந்தரலிங்கம் வழிமொழிய சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. அடுத்து 30.12.2022 ஆந் திகதி நடைபெற்ற 49 ஆவது விசேடசபை அமர்விற்கான குறிப்பில் திருத்தங்கள் ஏதுமிருப்பின் குறிப்பிடுமாறும் அல்லது கூட்ட குறிப்பை அங்கீகரிக்குமாறும் தவிசாளர் சபையை கேட்டுக்கொண்டார். திருத்தங்கள் ஏதுமற்ற நிலையில் கூட்டக்குறிப்பானது உறுப்பினர் திரு.ச.சண்முகதாஸ் முன்மொழிய உபதவிசாளர் திரு.த.சுந்தரலிங்கம் வழிமொழிய சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.

**அடுத்**து தவிசாளரின் விசேட அறிவித்தலில் எமது ஆதன பதிவேட்டில் வல்வெட்டியிலுள்ள மல்லியோடை வீதியானது முன்னர் சுகந்தன் வீதி என்றே பாவனையிலிருந்ததாகவும், அதனை சுகந்தன் வீதி என பெயர் மாற்றி தருமாறு அப்பிரதேச மக்களால் ஒப்பமிடப்பட்டு கோரிக்கைக்கடிதம் சமர்ப்பிக்கபட்டிருப்பதாக தவிசாளரால் குறிப்பிடப்பட்ட போது, குறித்த பெயருக்குரிய நபர் முன்பு நகரசபை ஊழியராக இருந்ததுடன் அவர் இறந்த பிற்பாடே அவரது பெயர் அவ்வீதிக்கு வைக்கப்பட்டதாகவும் குறித்த வீதியினை பெயர்மாற்றுவதனால் பிரச்சனை ஏதுமில்லை எனவும்,உறுப்பினர் திரு.ஆ.ஞானேந்திரனால் குறிப்பிடப்பட்டது. பெயர்மாற்றுதல் தொடர்பாக பிரசுரிக்க வேண்டுமென உறுப்பினர் திரு.ச.செல்வேந்திராவால் குறிப்பிடப்பட்டது. சட்டப்படி பெயர்மாற்றுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாமெனவும், அதற்கு எதிர்ப்புக்களேதும் வராத பட்சத்தில் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாமெனவும், தவிசாளரால் குறிப்பிடப்பட்ட போது, உறுப்பினர்கள் அக்கருத்துடன் உடன்பட்டு ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. குறித்த வீதி கரவெட்டி பிரதேச எல்லையுடன் இருப்பதனால் இப்பெயர்ப்பலகை எமது நகராட்சி மன்ற எல்லைக்குள் நடப்பட வேண்டுமெனவும் உறுப்பினர் திரு.த.சுந்தரலிங்கத்தினால் குறிப்பிடப்பட்டது.

அடுத்து உலகுடைய பிள்ளையார் கோவிலடியிலுள்ள இலட்சுமி வளவு பாதையானது குறித்த காணி உரிமையாளர்களால் அடைக்கப்பட்டிருப்பதனால் அப்பிரதேச மக்கள் பெரும்பாலானோர் ஒப்பமிட்டு அதற்கான தீர்வினை பெற்றுத்தரும்படி கோரிக்கைக்கடிதம் சமர்ப்பித்திருப்பதாகவும், இப்பிரச்சனை தொடர்பாக 2020 ஆம் ஆண்டு குறித்த காணிக்காரரிடம் கலந்துரையாடி நகரசபையினால் காணியினை கொள்வனவு செய்யலாமெனவும் இல்லையெனில் அதனை சுவீகரித்து அவர்களுக்கான

பாதையினை வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கலாமெனவும் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தமை தவிசாளரால் சுட்டிக்காட்டப்பட்ட போது, குறிப்பிட்ட சிலரின் பயன்பாட்டிற்கே அப்பாதை பயன்படுகின்றதென உறுப்பினர் திரு.ச.சண்முகதாஸால் குறிப்பிடப்பட்டது. காணிக்கான தோம்பில் பாதைக்கான எதுவித சான்றுகளுமில்லை அவ்வாறிருக்கையில் அவர்கள் பாதையினை விட சம்மதிக்கமாட்டார்களென உறுப்பினர் திரு.மு.ஆனந்தராசாவால் குறிப்பிடப்பட்டது. ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்தினையே நடைமுறைப்படுத்தலாமென உறுப்பினர் திருமதி.இ.கைலாஜினியால் கூறப்பட்டமை உறுப்பினர்கள் திரு.க.சதீஸ் மற்றும் திரு.ச.சண்முகதாஸ் நீங்கலாக ஏனையோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அடுத்து வல்வெட்டித்துறை சந்தியில் பூங்கன்றுகள் வைக்கப்பட்டு Net அடிக்கப்பட்டுள்ளமை போக்குவரத்திற்கு இடையூறாக இருப்பதாக மக்கள் முறைப்பாடு செய்துள்ளமை தொடர்பாக சபையில் ஆராயப்பட்ட போது, நேவ இனை அகற்றி அதற்கான மாற்றுவழியினை மேற்கொள்வதென சபையினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அடுத்து ஆதிகோவிலடியில் வீதிகளில் கருவாடுகள் போடப்பட்டிருப்பது போக்குவரத்திற்கு இடையூறாக இருப்பதாக நகராட்சி மன்ற வருமானவரிப் பரிசோதகர்கள் அறிக்கை சமர்ப்பித்துள்ளமை தொடர்பாக ஆராயப்பட்ட போது, போக்குவரத்திற்கு இடையூறாக வீதிகளை பயன்படுத்த வேண்டாமென அவ்விடத்தில் காட்சிப்படுத்த வேண்டும் (பதாதைகள் மூலம்) எனவும், அவ்விதியினை மீறுபவர்களுக்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாமெனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அடுத்து திரு.கணபதி செந்தில்குமரன் என்பவரால் வல்வெட்டித்துறை ஊறணி குடியேற்ற பகுதியில் மது விற்பனை நிலையம் ஒன்றினை அமைப்பதற்கு அனுமதி கோரியுள்ளமை தொடர்பாக உறுப்பினர்களுக்கு கடிதம் சமர்ப்பிக்கப்பட்ட விடயம் சபையில் ஆராயப்பட்ட போது, நகராட்சி மன்ற எல்லைக்குள் மதுவிற்பனை நிலையங்களை அமைப்பதற்கு அனுமதியில்லையென ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானப்படி குறித்த நபருக்கு அனுமதி வழங்க முடியாது என சபையினால் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அடுத்து ஏற்கனவே தீர்மானமெடுக்கப்பட்டபடி ஆதிகோவிலடி சந்தை தொடர்பாக கலந்துரையாடுவதற்காக எம்மால் அழைக்கப்பட்ட சங்கங்களில் கோயில் நிர்வாகத்தினர் மாத்திரமே கலந்து கொண்டனர். ஆவர்களுடன் சந்தை நடைமுறைகள் தொடர்பாக எம்மால் விளக்கமளிக்கப்பட்டது. அவ்விடயம் தொடர்பாக தாம் ஏனையவர்களுடன் கலந்துரையாடி 14 நாட்களுக்குள் பதிலளிப்பதாக குறிப்பிட்டிருந்ததாக தவிசாளரால் குறிப்பிடப்பட்டது.

அலுவலக காவலாளிகள் இருவருக்குமான மேலதிக நேரக்கொடுப்பனவுகள் அதிகமாக வழங்கப்படுவதால் இன்னுமொரு காவலாளியை நியமனஞ் செய்யலாமென்ற ஆய்வு உத்தியோகத்தரின் அறிக்கை தொடர்பாக சபையில் ஆராயப்பட்ட போது, தற்போதுள்ள நாட்டு நிலைமையில் அதிகரித்த விலைவாசி சூழலில் அவர்களுக்கான கொடுப்பனவுகள் அதிகளவானதாக காணப்படவில்லை என்பதோடு இன்னொருவரை நியமிக்குமிடத்து மேலதிக நேரக் கொடுப்பனவிற்கு மேலதிகமாக வேதனம் வழங்க வேண்டியிருக்கும் என்பதனால் மேலதிக நியமனம் தேவையில்லையென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

அடுத்து **சபைக்கு அறிவிக்க வேண்டிய விடயங்கள்** தொடர்பில் தவிசாளரால் தெரிவிக்கப்பட்டு தேவையான விடயங்கள் தொடர்பில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அடுத்து **பிற விடயங்கள்** தொடர்பில் ஆராயப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

- ❖ மயானக் கொட்டகை மேற் கூரைகள் பிரிந்து காணப்படுவதாக உபதவிசாளர் திரு.தசுந்தரலிங்கத்தால் குறிப்பிடப்பட்ட போது மயான வேலைத்திட்டங்கள் தொடர்பாக முகப்புத்தகங்களில் குறிப்பிடுவோமாயின் வெளிநாட்டவர்களின் உதவிகளை நாம் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்குமென உறுப்பினர் திரு.பா.ஜெகனால் கூறப்பட்டது. வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தினுள் காணப்படுகின்ற மாயானங்கள் முதலில் சிரமதானங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென உறுப்பினர் திருமதி.இ.கைலாஜினியால் குறிப்பிடப்பட்டது.

- ❖ கட்டட அனுமதி பெறல் தொடர்பான விண்ணப்பப்படிவங்களை பூரணப்படுத்துகின்ற போது மக்கள் அவை குறித்த தெளிவான அறிவின்மையினால் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என உறுப்பினர் திரு.பா.ஜெகனால் குறிப்பிடப்பட்ட போது, அவ்வாறு தேவையேற்படுபவர்களுக்கு எமது உத்தியோகத்தர்களின் உதவி மாற்று ஒழுங்குகளை மேற்கொள்ளலாமென தவிசாளரால் குறிப்பிடப்பட்டது.

- ❖ ஆதிகோவிலடி மலசலகூடப் பிரச்சனை தொடர்பாக ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானப்படி அம்மக்களுடன் ஒரு கலந்துரையாடலை ஒழுங்கு செய்யுமாறு உபதவிசாளர் திரு.த.சுந்தரலிங்கத்தினால் குறிப்பிடப்பட்டது.

- ❖ பட்டத்திருவிழாவின் போது நகராட்சி மன்றத்தினால் வரி அறவிடப்பட்டமைக்கு மேலாக வியாபாரிகளிடம் குறித்த சங்கங்கள் நில வாடகைகளை பற்றுச்சீட்டுக்கள் வழங்காது அறவிட்டிருப்பது தவறான ஒரு விடயமாகுமென உறுப்பினர் திரு.மு.ஆனந்தராசா மற்றும் உறுப்பினர் திரு.து.ஸ்ரீதரன் ஆகியோரால் குறிப்பிடப்பட்டமைக்கு குறித்த விடயம் தொடர்பாக உரிய சான்றுகளுடன் யாராவது முறைப்பாடு செய்வார்களாயின் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமென தவிசாளரால் குறிப்பிடப்பட்டது.
- ❖ தீருவில் பூங்காவில் மரம் முறிந்து காணப்படுவதாகவும், அதனை அங்கிருந்து அப்புறப்படுத்துவதற்குரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறும், உபதவிசாளர் திரு.த.சுந்தரலிங்கத்தினால் குறிப்பிடப்பட்டமைக்கு அதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென தவிசாளரால் கூறப்பட்டது.

- ❖ பழுதடைந்த வீதி விளக்குகளை திருத்துவதற்கு உரிய வழிவகை யாதென உறுப்பினர் திரு.மு.ஆனந்தராசாவால் கேட்கப்பட்டமைக்கு தற்போதய சூழலில் தேசிய கொள்கைக்கு அமைவாக **CEB** மூலமாக இதனை செய்ய முடியாதெனவும் தங்களால் இதனை தனிப்பட்ட ரீதியில் செய்ய முடியுமாயின் அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாமெனவும், ஆனால் அதற்குரிய பொறுப்புக்கூறல் சபையைச் சாராதென தவிசாளரால் குறிப்பிடப்பட்டது.

- ❖ பழைய ஆஸ்பத்திரி வீதியிலிருந்து கடற்கரைக்கு கான் அமைக்கப்படவில்லையெனவும், சபை இல்லாவிடினும் தனியாரால் அதனை அமைப்பதற்கு அனுமதி உண்டா என உறுப்பினர் திரு.மு.ஆனந்தராசாவால் வினாவப்பட்டமைக்கு தற்போது போதியளவு சபை நிதி இல்லை எனினும் தனியார் எமது தொழில்நுட்ப உத்தியோகத்தரின் சிபார்சிற்கமைய அவரது மேற்பார்வையின் கீழ் கானை அமைக்க கோரிக்கை சமர்ப்பிக்குமிடத்து அதனை சாதகமாக பரிசீலிக்க வாய்ப்புக்களுண்டு என தவிசாளரால் தெரிவிக்கப்பட்டது.

- ❖ உறுப்பினர்களுக்கான நிதியில் அமைக்கப்பட்ட வீதியானது தற்போது ஸ்திரமற்ற நிலையில் காணப்படுகின்றதென உறுப்பினர் திரு.ச.சண்முகதாஸ் குறிப்பிட்டமைக்கு குறித்த வேலைத்திட்டத்தின் தரம் தொடர்பாக முறைப்பாடு இருப்பின் எழுத்து மூலம் வழங்குமாறும் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுமென தவிசாளரால் குறிப்பிடப்பட்டது.

இறுதியாக தவிசாளரின் நன்றியுடன் முற்பகல் 11.00 மணியளவில் சபை அமர்வு நிறைவுபெற்றது.

**தீர்மான இல : 1258/18.01.2023**

**குறை நிரப்பிற்கான அனுமதி :**

2023 ஆம் ஆண்டு வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான சம்பளக் கொடுப்பனவு பாதீட்டில் ஒதுக்கப்படாமையினால் அத்தொகையினை பின்வருமாறு குறைநிரப்புச் செய்ய அனுமதிப்பதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

| குறைநிரப்பு 2023 | | | | | |
|---|---|---|---|---|---|
| **மாதம் : ஜனவரி 2023** | | | | | |
| **வருமானத் தலைப்பு** | | **தொகை** | **செலவினத் தலைப்பு** | | **தொகை** |
| 1-1-371 | நிர்வாக மீளளிப்பு | 5,101,380.00 | 1-1-411 | சம்பளங்களும் கூலிகளும் | 3,448,980.00 |
| | | | 1-1-415(ஆ) | இடைக்காலப்படி | 810,000.00 |
| | | | 1-1-416(அ) | வாழ்க்கைச் செலவுப்படி | 842,400.00 |
| | | 5,101,380.00 | | | 5,101,380.00 |
| | | | | | |

முன்மொழிந்தவர்:- திரு.கு.கமலதாஸ் வழிமொழிந்தவர்:- திருமதி.க.சுந்தரேஸ்வரி

**தீர்மான இல : 1259/18.01.2023**

**2023 ஆம் ஆண்டிற்கான நிலையான கொடுப்பனவுகளுக்கான அனுமதி :**

2023 ஆம் ஆண்டுக்கான உத்தியோகத்தர் ஊழியர்களுக்கான சம்பளங்கள், விதவைகள் அனாதைகளுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு, காப்புறுதிக் கொடுப்பனவு மற்றும் உறுப்பினர்களுக்கான படி, தொலைபேசிக் கொடுப்பனவு போன்ற நிலையான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு அனுமதியளிப்பதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திரு.கு.கமலதாஸ் வழிமொழிந்தவர்:- திருமதி.க.சுந்தரேஸ்வரி

**தீர்மான இல :1260/18.01.2023**

**வல்வெட்டித்துறை நகரசபையின் 2023 ஆம் ஆண்டிற்கான Action Plan தொடர்பான அனுமதி :**

வல்வெட்டித்துறை நகரசபையினால் தயாரிக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டுக்கான Action Plan இனை நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதியளிப்பதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திரு.ஆ.ஞானேந்திரன் வழிமொழிந்தவர்:- திரு.த.சுந்தரலிங்கம்

**தீர்மான இல :1261/18.01.2023**

**LDSP திட்டத்தின் கீழ் செயற்றிறன் பரிமாற்ற நிதி ஒதுக்கீடு (PT-2) இல் வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட பிரதான வீதிகளுக்கு பெயர்ப்பலகையிடல் வேலைத்திட்டத்தினை மேற்கொண்டமைக்கான கொடுப்பனவு அனுமதி.**

LDSP திட்டத்தின் கீழ் செயற்றிறன் பரிமாற்ற நிதி ஒதுக்கீடு (PT-2) இல் வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட வீதிகளுக்கு பெயர்ப்பலகையிடல் வேலைத்திட்டத்தினை மேற்கொண்டமைக்கான கொடுப்பனவு ரூபா 1,102,000.00 இனை கொடுப்பனவு செய்ய அனுமதி வழங்குவதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திரு.ஆ.ஞானேந்திரன் வழிமொழிந்தவர்:- திரு.கு.கமலதாஸ்

**தீர்மான இல : 1262/18.01.2023**

**LDSP திட்டத்தின் கீழ் BT-1, BT-2, BT-3 போன்ற வேலைத்திட்டங்களில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்குவதற்கான அனுமதி.**

LDSP திட்டத்தின் கீழ் BT-1, BT-2, BT-3 போன்ற வேலைத்திட்டங்களில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவை 18.01.2023 ஆந் திகதிய 6th Provincial Skering Community இல் எடுத்த தீர்மானத்திற்கமைவாக கீழ்வருமாறு LDSP நிதியிலிருந்து வழங்குவதற்கு அனுமதி வழங்குவதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

- Secretary – 23%
- TO-17%
- Accountant – 17%
- CDO – 8%
- Procument Staff & Others – 8%
- Finance Staff & Others – 8%
- TO (ACLG) – 11%
- Subject & Others (ACLG) – 8%

முன்மொழிந்தவர்:- திரு.ஆ.ஞானேந்திரன் வழிமொழிந்தவர்:- திரு.கு.கமலதாஸ்

**தீர்மான இல : 1263/18.01.2023**

**2022 ஆம் ஆண்டிற்கான சபைநிதி வேலைகளுக்கான கொடுப்பனவு அனுமதி :**

2022 ஆம் ஆண்டுக்கான பின்வரும் வீதி புனரமைத்தல் வேலைத்திட்டங்களுக்காக சில்லறைக்கடன் கொடுநர் கணக்கில் வைக்கப்பட்ட சபைநிதியில் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு அனுமதியளிப்பதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

- நெற்கொழு 3வது வீதி
- வாவினி 13வது வீதி
- சிவபுர (சடையாண்டி) இணைப்பு வீதி

முன்மொழிந்தவர்:- திரு.கு.கமலதாஸ் வழிமொழிந்தவர்:- திருமதி.க.சுந்தரேஸ்வரி

**தீர்மான இல : 1264/18.01.2023**

**வல்வெட்டி மல்லியோடை வீதியினை பெயர்மாற்றம் செய்வதற்குரிய அனுமதி :**

வல்வெட்டியிலுள்ள மல்லியோடை வீதியினை சுகந்தன் வீதி என பெயர்மாற்றுவதற்குரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதெனவும், அதற்கு எதிர்ப்புக்களேதும் வராத பட்சத்தில் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாமெனவும் சபையினால் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திரு.ஆ.ஞானேந்திரன் வழிமொழிந்தவர்:- திரு.ச.செல்வேந்திரா

**தீர்மான இல : 1265/18.01.2023**

**வல்வெட்டித்துறை சந்தியிலுள்ள கூட்டினை (Net) அகற்றுவதற்கான அனுமதி :**

வல்வெட்டித்துறை சந்தியில் பூங்கன்றுகள் வைக்கப்பட்டு கூடு (Net) அடிக்கப்பட்டுள்ளமை போக்குவரத்திற்கு இடையூறாக இருப்பதாக மக்கள் முறைப்பாடு செய்துள்ளமையினால் அக்கூட்டினை

(Net) இனை அகற்றி அதற்கான மாற்றுவழியினை மேற்கொள்வதென சபையினால் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திரு.ச.செல்வேந்திரா வழிமொழிந்தவர்:- திரு.பா.ஜெகன்

**தீர்மான இல : 1266/18.01.2023**

**ஆதிகோவிலடி வீதியில் போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்க வேண்டாமென்ற பதாதைகளை நடுவதற்கான அனுமதி :**

ஆதிகோவிலடியில் வீதிகளில் கருவாடுகள் போடப்பட்டிருப்பது போக்குவரத்திற்கு இடையூறாக இருப்பதாக நகராட்சி மன்ற வருமானவரிப் பரிசோதகர்கள் அறிக்கை சமர்ப்பித்துள்ளமையினால் போக்குவரத்திற்கு இடையூறாக வீதிகளை பயன்படுத்த வேண்டாமென அவ்விடத்தில் (பதாதைகள் மூலம்) காட்சிப்படுத்த வேண்டும் எனவும், அவ்விதியினை மீறுபவர்களுக்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாமெனவும் சபையினால் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திருமதி.இ.கைலாஜினி வழிமொழிந்தவர்:- திரு.கு.கமலதாஸ்

**தீர்மான இல : 1267/18.01.2023**

**நகரசபை உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கு 2023 ஆம் ஆண்டிற்கான மேலதிக நேரக் கொடுப்பனவு அனுமதி :**

கடந்த காலங்களில் வழங்கப்பட்டதைப் போன்று 2023 ஆம் ஆண்டு நகரசபையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கு பின்வரும் வகையில் மேலதிக கடமைகளின் உறுதிப்படுத்தலின் அடிப்படையில் மேலதிக நேரக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கான அனுமதியினை வழங்குவதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

- உத்தியோகத்தர்கள் - 20 மணித்தியாலம்
- உத்தியோகத்தர்கள் (ஜனவரி, பெப்ரவரி) – 40 மணித்தியாலம்)
- சுகாதார மற்றும் வேலைத் தொழிலாளி – 20 மணித்தியாலம்
- சாரதி – 40 மணித்தியாலம்
- அலுவலக உதவியாளர் - 60 மணித்தியாலம்
- காவலாளி – 90 மணித்தியாலம்
- பொது சுகாதார பரிசோதகர் - 40 மணித்தியாலம்
- விசேட கடமைகள் (மீன்சந்தை, நீச்சல் தடாகம்) – 60 மணித்தியாலம்
- செயலாளர் / கணக்காளர் / தொழிநுட்ப உத்தியோகத்தர் - 5 விடுமுறை நாட் கொடுப்பனவு

முன்மொழிந்தவர்:- திரு.கு.கமலதாஸ் வழிமொழிந்தவர்:- திருமதி.க.சுந்தரேஸ்வரி

**தீர்மான இல : 1268/18.01.2023**

**பொதுப்பாதை தொடர்பான அனுமதி :**

வல்வெட்டித்துறை அமைரிக்கன் மி;ன் பாடசாலை வீதியிலிருந்து மேற்குப்புறமாக பிரிந்து செல்லும் பாதை இலட்சுமி வளவு ஊடாக உலகுடையய பிள்ளையார் கோவில் ஒழுங்கையை இணைக்கும் குறுகலான பாதை பல வருடங்களாக பொது மக்களால் பயன்படுத்தப்பட்டு வருவதனை கருத்திற்கொண்டு ஏற்கனவே எடுக்கப்பட்ட 687/23.06.2023 ஆம் இலக்க தீர்மான இலக்கப்படி உலகுடையய பிள்ளையார் கோவில் முகப்பாக கொண்ட காணியில் பத்து அடி அகலமான

காணித்துண்டை அரச விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீட்டை பெற்று பொது மக்களின் நிதிப்பங்களிப்புடன் பாதைக்கான துண்டுக்காணியினை உரிமையாளர்களிடமிருந்து கொள்வனவு செய்வதெனவும், உரிமையாளர் விற்பனை செய்வதை விரும்பாவிடின் அக்காணித்துண்டை சுவீகரித்து அதற்கான ந்;ட ஈட்டை அவருக்கு வழங்க நடவடிக்கை (பொது மக்களின் நிதிப்பங்களிப்புடன் சேர்த்து ) முன்னெடுப்பதெனவும் சபையினால் ஏகமனதாக தீர்மானமெடுக்கப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திருமதி.இ.கைலாஜினி வழிமொழிந்தவர்:- திரு.ச.செல்வேந்திரா

**தீர்மான இல :- 1269/18.01.2023**

**ரூபா 150,000.00 இற்கு மேற்பட்ட பின்வரும் கொடுப்பனவுகளுக்கு அனுமதி வழங்கல்.**

பின்வரும் விபரப்படியான ரூபா 150,000.00 இற்கு மேற்பட்ட கொடுப்பனவுகளுக்கான அனுமதியினை வழங்குவதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

| தொ. இல | உ.சீ. இல | யாருக்கு | விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | 1 | கலைவாணி சனசமூக நிலையம் | நெற்கொழு 3ஆம் ஒழுங்கை வேலைக்கான நிதியினை சில்லறைக்கடன் கொடுத்தோர் கணக்கில் வைப்பிலிடும் வகையில் | 285,292.99 |
| 2 | 2 | வல்வை விக்னேஸ்வரா சனசமூக சேவா நிலையம் | சிவபுர வீதி – சடையாண்டி இணைப்பு வீதி வேலைக்கான நிதியினை சில்லறைக்கடன் கொடுத்தோர் கணக்கில் வைப்பிலிடும் வகையில் | 230,981.64 |
| 3 | 3 | செம்மீன் சனசமூக நிலையம் | வாவினி 13 ஆம் ஒழுங்கை வேலைக்கான நிதியினை சில்லறைக்கடன் கொடுத்தோர் கணக்கில் வைப்பிலிடும் வகையில் | 779,315.18 |
| 4 | 4 | திருமதி.ஜெ.வானதி | இடர்கடன் வழங்கும் வகையில் | 250,000.00 |
| 5 | 5 | செல்வி.ச.ஜனனி | இடர்கடன் வழங்கும் வகையில் | 250,000.00 |
| 6 | 6 | திரு.என்.நீதிராசா | இடர்கடன் வழங்கும் வகையில் | 223,400.00 |

முன்மொழிந்தவர்:- திரு.ச.செல்வேந்திரா வழிமொழிந்தவர்:- திரு.பா.ஜெகன்

**தீர்மான இல : 1270/18.01.2023**

**வெளிவாரி அடிப்படையில் நியமிக்கப்பட்ட பணியாளர்களுக்கான கொடுப்பனவு அனுமதி :**

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்திற்கு வெளிவாரி அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட பணியாளர்களுக்கு அவர்களுடைய ஒப்பந்த காலம் 2023 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையுமான காலப்பகுதிக்கு பின்வரும் வகையில் கொடுப்பனவினை மேற்கொள்ள அனுமதி வழங்குவதென சபையினால் ஏகமனதாக தீர்மானமெடுக்கப்பட்டது.

- வேலைப்பகுதி பணியாளர்கள் (8 மணித்தியாலங்கள் ) நாளொன்றுக்கு ரூபா 1300.00 வீதம்

- நீச்சல் தடாக பராமரிப்பாளர் (10 மணித்தியாலங்கள் ) ரூபா 1500.00 வீதம்.
- நீச்சல் தடாக பராமரிப்பாளர் - ரூபா 35,000.00 ( வாரத்தில் 2 நாட்கள் வரவினடிப்படையில்)

முன்மொழிந்தவர்:- திரு.கு.கமலதாஸ் வழிமொழிந்தவர்:- திருமதி.க.சுந்தரேஸ்வரி

**தீர்மான இல : 1271/18.01.2023**

**கடந்த காலங்களில் நேரடியாக முத்திரையாக ஒட்டப்பட்ட கிடைக்கப்பெறாத முத்திரைத் தீர்வை நிலுவைகளை பதிவழித்தல் தொடர்பான அனுமதி :**

வடமாகாணத்தின் முத்திரைத் தீர்வைகள் மாகாண இறைவரித் திணைக்களத்திற்கு மாற்றுவதற்கான நிலையியற் கட்டளை உருவாக்கப்பட்டு நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர் 2015 யூலை தொடக்கம் டிசம்பர் வரையான காலப்பகுதியில் சில நொத்தாரிசினால் முத்திரைத் தீர்வை முன்னைய நடைமுறைக்களுக்கமைவாக முத்திரையாக ஒட்டப்பட்டு அத்தொகை மத்திய அரசின் திறைசேரிக்கு செலுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் எமக்கு வருமதியாக உள்ள முத்திரைத் தீர்வை ரூபா.278,836.50 இதுவரை கிடைக்கப்பெறவில்லை. இத்தொகை இனி மீளளிக்கப்படமாட்டாது என அறியக்கிடைப்பதால் முத்திரைத் தீர்வைப் பத்திவேட்டில் நிலுவையாக காட்டப்பட்டுள்ள குறித்த தொகை நகரசபை கட்டளைச்சட்டம் அத்தியாயம் 255 பிரிவு 171இற்கு அமைய கௌரவ ஆளுநரின் அனுமதி பெற்று பதிவழிப்புச் செய்வதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திரு.பா.ஜெகன் வழிமொழிந்தவர்:- திருமதி.கு.இராஜேஸ்வரி

**தீர்மான இல : 1272/18.01.2023**

**பாதுகாப்பு கடமையில் ஈடுபடுகின்ற தனியார் பாதகாப்பு சேவை உத்தியோகத்தர்களுக்கான டிசம்பர் மாத கொடுப்பனவினை வழங்குதல் அனுமதி :**

வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற பிரிவுகளுக்கான பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ள தனியார் பாதுகாப்புச்சேவை உத்தியோகத்தர்களுக்கான டிசம்பர் 2022 மாத வேதனக் கொடுப்பனவு ரூபா 187,381.05 இனை Kestrel Service (PVT) Ltd இற்கு சில்லறைக்கடன் கொடுநர் கணக்கிலிருந்து கொடுப்பனவு செய்வதற்கு அனுமதி வழங்குவதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திருமதி.க.சுந்தரேஸ்வரி வழிமொழிந்தவர்:- திரு.ச.செல்வேந்திரா

**தீர்மான இல : 1273/18.01.2023**

**மது விற்பனை நிலையம் அமைத்தல் தொடர்பான கோரிக்கை :**

திரு.கணபதி செந்தில்குமரன் என்பவரால் வல்வெட்டித்துறை ஊறணி குடியேற்ற பகுதியில் மது விற்பனை நிலையம் ஒன்றினை அமைப்பதற்கு அனுமதி கோரியுள்ளமை தொடர்பாக உறுப்பினர்களுக்கு கடிதம் சமர்ப்பிக்கப்பட்ட விடயம் சபையில் ஆராயப்பட்ட போது, நகராட்சி மன்ற எல்லைக்குள் மதுவிற்பனை நிலையங்களை அமைப்பதற்கு அனுமதியில்லையென ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானப்படி குறித்த நபருக்கு அனுமதி வழங்க முடியாது என சபையினால் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திரு.கு.கமலதாஸ் வழிமொழிந்தவர்:- திரு.பா.ஜெகன்

**தீர்மான இல : 1274/18.01.2023**

**வல்வெட்டித்துறை நகரசபையினால் தயாரிக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டிற்கான கழிவகற்றல் நடவடிக்கைகளுக்கான செயற்படு திட்டம் (Action Plan) தொடர்பான அனுமதி :**

வல்வெட்டித்துறை நகரசபையினால் தயாரிக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டுக்கான கழிவகற்றல் நடவடிக்கைகளுக்கான செயற்படு திட்டத்தினை (Action Plan) நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதியளிப்பதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திரு.ஆ.ஞானேந்திரன் வழிமொழிந்தவர்:- திரு.ச.செல்வேந்திரா

**தீர்மான இல : 1275/18.01.2023**

**2023 ஆம் ஆண்டிற்கான பராமரிப்பு செயற்திட்டங்களை தயாரித்தலும் அமுல்படுத்துதலும் :**

2023 ஆம் ஆண்டிற்கான பராமரிப்பு செயற்திட்டங்களை தயாரித்தலும் அமுல்படுத்துதலும் செயற்திட்டத்தின் கீழ் தொண்டைமானாறு கடற்கரை வீதி புனரமைத்தல் திட்டத்தினை (ரூபா 1.4 மில்லியன்) நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதியளிப்பதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திரு.பா.ஜெகன் வழிமொழிந்தவர்:- திரு.கு.கமலதாஸ்